பாலியர் நேசன்

BALIAR NESAN

தனிப்பிரதி ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/- • மலர் 126 | பிப்ரவரி 2018 | இதழ் 2

கிருபையை சிந்திப்போம்
தேவனே,
உமது ஆலயத்தின்
நடுவிலே,
உமது கிருபையைச்
சிந்தித்துக்
கொண்டிருக்கிறோம்.
சங்கீதம்:48:9

கிருபையை சிந்திப்போம்

Hi Friends,

புது வருடம் சிறப்பாய் போய்க்கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். உன்னோடு இக்கடிதம் வழியாய் இந்த புது வருடத்தில் தொடர்பு கொள்ள ஆண்டவர் கொடுத்த வாய்ப்புக்காக அவரை துதிக்கிறேன்.

கடந்த வருடம் முழுவதும் நம்மை காத்த ஆண்டவர் இந்த வருடத்தின் இரண்டாம் மாதத்திலும் நமக்கு அநேக நன்மைகளை வைத்திருக்கிறார். உன்னுடைய படிப்பு, விளையாட்டு, கடவுளோடு உள்ள உறவு அனைத்தும் மேம்பட தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

இந்த மாதம் "கிருபையை சிந்திப்போம்" என்ற தலைப்பில் நாம் தியானிக்க இருக்கிறோம். சங்கீதம் 48:9 ல் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது,

"தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்".

கடவுளின் மக்கள் ஆண்டவர் தங்களுக்குக் கொடுத்த விடுதலையைக் கொண்டாடி அதற்குக் காரணமான கடவுளின் கிருபையை சிந்தித்துக் கொண்டிருப்பதாக இந்த சங்கீதம் கூறுகிறது.

கடவுள் மனித குலத்திற்கு கொடுத்த மிகப்பெரிய திறன்களில் மிகமுக்கியமான ஒன்று சிந்தனை சக்தி. நாம் எப்படி சிந்திக்கிறோமோ அப்படியே வாழ்கிறோம். ஆகவே தீய சிந்தனை நம் மனதில் வராதவாறு நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டியது அவசியம். நன்மையை சிந்திக்கும்போது கடவுள் உனக்கு, எனக்கு செய்த கிருபைகளை சிந்தித்துப்பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம். நீ உன் சிறுவயதிலிருந்து ஆண்டவர் உன்மேல் எவ்வளவு கிருபையாயிருந்தார் என்று அனுதினமும் நினைப்பாயானால் நீ ஆண்டவருக்கு ஏற்றபிள்ளையாய் வாழ்வாய், ஆசீர்வாதம் பெறுவாய். கூடவே பவுல் அண்ணன் சொல்கிறார்,

"உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்".

நம் சிந்தைகள் மேன்மையுள்ளதாகட்டும். வருகின்ற லெந்து காலங்கள் நம் சிந்தைகளை தொடர்ந்து நெறிப்படுத்தி காக்கட்டும். ஆண்டவரின் கிருபைகளையே சிந்தித்துக் கொண்டிருப்போம்.

Tirunelveli Diocesan Childrens Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Email: baliarnesan@gmail.com Phone: 8148182281
www.baliarnesan.com

ஆ. பாக்யராஜ்

கிருபையை சிந்திப்போம்

Mrs.Daslin Hubert

தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். சங்கீதம் 48:9.

கிருபை என்றால் என்ன? என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். கிருபை என்றால் "தகுதியற்றவர்களுக்கு தேவனால் அருளப்படும் ஈவு" என்று பொருளாகும்.

தேர்வு எழுதியிருக்கிற ஒரு மாணவன் தேர்ச்சி பெற குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் தேவை. அவன் எழுதியிருப்பதற்கு 32 மதிப்பெண்கள் மட்டுமே கொடுக்க முடியும். இதனால் அவன் ஒரு ஆண்டை இழக்க வேண்டுமே என்று கருதி 3 என்று சேர்த்து ஆசிரியர் அவனை தேர்ச்சி பெற செய்கிறார். அந்த 3 மதிப்பெண்களைப் பெறுவதற்கு அவன் தகுதியில்லை. ஆனாலும் ஆசிரியரின் தயவினால் அவன் தேர்ச்சி பெறுகிறான். அதைப்போல தேவன் தகுதியற்றவர்களுக்கு கொடுக்கும் ஈவு தான் கிருபை. கிருபையின் மூலம் அவருடைய பிள்ளைகளாகும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம்.

இப்படிப்பட்ட கிருபையைத்தான் தாவீது ராஜா சங்கீதம் 48:9ல் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார். அவர் தேவனின் கிருபையை நம்பியிருந்தபடியினால் தான் அவருக்கு ஏற்பட்ட எல்லா உபத்திரவத்திலும், இடுக்கண்ணிலும் சோதனைகளிலும் தேவன் அவரை கிருபையாய் காத்தார்.

ராஜாவாகிய சவுல் தாவீதை எப்படியும் கொன்று போடவேண்டும் என்று அவர் பின் தொடர்ந்த போதிலும் சவுலின் கைக்கு தாவீதை தேவன் தம்முடைய கிருபையினால் மீட்டார்

என்பதை சங்கீதம் 57: 3ல் ‘தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்” என்றும் சங்கீதம் 32:10 ல் ‘கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்” என்று பாக்கிறோம்.

ஆம் அன்பான தேவனின் கண்மணிகளே இந்த கிருபையைத் தான் தானியேலின் வாழ்வில் நாம் பார்க்க முடிகிறது. சிங்கங்கள் தானியேலை சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார் என்பதை தானியேல் 6:22ல் பார்க்கிறோம். தேவன் பேரில் விசுவாசமாயிருந்தபடியால் அவரின் கிருபையில் நம்பிக்கை கொண்டபடியால் அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை. இப்படித்தான் யோபுவும் ‘அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்” என்று யோபு 13:15ல் கூறுகிறார். இப்படி யோபு தேவனுடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருந்தார்.

அன்பு கண்மணிகளே, நாமும் தேவன் மேல் முழு நம்பிக்கை வைத்து, அவரது கிருபையை எந்நாளும் சிந்திப்போம். சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார் என்று வேதம் கூறுகிறது. எப்போதுமே நன்மையான காரியங்களையே சிந்தியுங்கள். கர்த்தர் எல்லார்மேலும் எப்படி கிருபையுள்ளவராய் இருந்தாரோ அப்படியே நாமும் மற்றவர்கள் மேல் கிருபையாயிருப்போம். கர்த்தருடைய கிருபையை எப்போதும் சிந்திப்போம்.

“கர்த்தரையை சிந்தி

அவர்கிருபையை சிந்தி”

எந்நாளும் சிந்தி

சிந்திப்போம் செயல்படுவோம் !

தினசரி தியானம்

Mrs.Helen Rachel Dhanasingh

1. வியாழன்: தப்புவியுங்கள் *(எரே.22:1-15)*

எல்லாருக்கும் நல்லது செய்ய வேண்டும். தீமை செய்யும் மனிதனிடமிருந்து பாதிக்கப்படும் மனிதனை காப்பாற்ற முயற்சி எடுப்பது நமது கடமை. எல்லாம் வல்ல ஆண்டவரின் துணையோடு பாதிக்கப்படுகிறவர்களை தப்புவியுங்கள்.

2. வெள்ளி: கர்த்தரின் வார்த்தை *(1சாமு.1:20-28)*

கர்த்தரின் வார்த்தை வல்லமையுள்ளது. அது உயிருள்ளது. மழை பூமியில் விழுந்து மீண்டும் மேலே செல்லாமல் தாவரங்களை முளைக்க செய்து அனைத்து உயிரினத்திற்கும் ஆகாரத்தை கொடுப்பது போல கர்த்தரின் வார்த்தையும் கர்த்தரிடத்திலிருந்து வந்து பூமியிலே அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும். நாம் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம்.

3. சனி: அறிவு *(எரே.22:16-30)*

மனிதன் கடவுளை அறிய பல புத்தகங்கள் வாசிக்கிறான். பல புனித இடங்களுக்கு செல்கிறான். ஆனால் ஏழை எளிய ஒடுக்கப்படுகிற மக்களின் குறைகளை விசாரித்து உதவுவதே கடவுளை அறிந்து கொள்ளும் அறிவாகும். அதுவே நம்மை சுகமாய் வாழ செய்யும் நிறைவான வாழ்வாகும்.

4. ஞாயிறு: சுகம் *(எரே.23:1-20)*

சுத்தம் சுகம் தரும் என்பதற்கேற்ப பரிசுத்த வாழ்வு அது இறைவன் விரும்பும் வாழ்வு. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தால் கர்த்தரின் ஆளுகையும் பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும். பூமியும் அதின் அனைத்தும் கர்த்தருடையது. நாம் இவ்வுலகில் ஆண்டவரால் சுகமாய் வாழலாம்.

5. திங்கள்: *எல்லாருக்கும் தேவன்* *(**எரே.23:21-40**)*

ஆரம்பகாலங்களில் ஆண்டவரை கண்ட மக்கள் தம் அறிவுக்கு ஏற்ற மாதிரி கடவுளை பற்றி மக்களிடம் சொன்னார்கள். ஆனால் கிறிஸ்து இயேசுமூலமாய் தன்னை எல்லாருக்கும் தேவ மைந்தனாக இரட்சகராக படைப்பாளராக வெளிப்படுத்தினார். உன்னையும் என்னையும் படைத்தவரும் இயேசுவே.

6. செவ்வாய்: அங்கிகரித்தல் *(எரே.24:1-10)*

இளையமகன் போல நாம் ஆண்டவரின் உறவையும் ஆசீர்வாத்தையும் தவறாக பயன்படுத்தி அனைத்தையும் இழந்து ஒன்றுமில்லாமல் இருக்கும்போது ஆண்டவர் நம் பாவங்களுக்காக உயிர் கொடுத்து நம்மை காப்பாற்றி அவர் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். இது நமக்கு கிடைத்த பெரிய நன்மையாகும்.

7. புதன்: பதில் செய்தல் *(எரே.25:1-20)*

நாம் அநேக முக்கியமான காரியங்களை மறந்து விடுகிறோம். ஆனால் ஆண்டவர் நம்மேல் நினைவாயிருந்து நம் செய்கைக்குத் தக்கதாக பதில் செய்கிறார். நாம் நன்மையை பிறருக்கு செய்தால் நமக்கு ஆண்டவர் அதிக நன்மையை பதிலாக செய்வார். நாம் நல்லதே செய்வோம் நன்மை பெறுவோம்.

8. வியாழன்: கர்த்தரின் பட்டயம் *(எரே.25:21-38)*

கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் பூமியின் மக்களை நியாயம் விசாரிப்பார். அவர் பரிதானம் வாங்குவதில்லை நியாயத்தை புரட்டுவதும் இல்லை. தீயோரை அழிப்பதற்கு தமது பட்டயத்தை கருக்காக்குகிறார் (தீட்டுகிறார்)

9. வெள்ளி: சீர்ப்படுத்துதல் *(எரே.26:1-14)*

மனிதனுடைய நினைவுகளும் செய்கைகளும் கடவுள் பார்வைக்கு வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. நாம் மனதில் நினைப்பதை கூட அவரால் அறிய முடியும். நம்முடைய எண்ணங்களும் செயல்களும் கடவுள் பார்வைக்கு நல்லதாக இருக்கும்போது நமக்கு வரக்கூடிய தீமைகளை கர்த்தர் நீக்கி நம்மை காப்பாற்றுவார்.

10. சனி: மனஸ்தாபம் *(எரே.26:15-24)*

நினிவே ஊர் மக்கள் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்ததால் நாற்பது நாளில் அழித்துவிடுவேன் என யோனா தீர்க்கதரிசி மூலம் கடவுள் மக்களுக்கு செய்தியனுப்பினார். மக்கள் இந்த செய்தி கேட்டு ஆண்டவரிடம் மனந்திரும்பினார்கள். ஆண்டவரும் அவர்களை மனஸ்தாபப்பட்டு மன்னித்தார். நாமும் கர்த்தரிடத்தில் மனந்திரும்பினால் நம் பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் வல்லவர்.

11. ஞாயிறு: கொடுக்கும் தேவன் *(எரே.27:1-22)*

கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்து அதை பண்படுத்தவும் பாதுகாக்கவும் மனிதனை படைத்தார். ஆனால் ஆண்டவருக்கு கீழ்ப்படிந்தால் இயற்கையை நமக்கு சாதகமாக்கி தருவார். ஈசாக்குக்கு நூறு மடங்கும் யோபுக்கு இருமடங்கு ஆசீர்வாதத்தை தந்ததும் ஆண்டவரே. நாம் ஆண்டவருக்கு கீழ்படிந்தால் நமக்கும் அளவில்லாமல் கொடுப்பார்.

12. திங்கள்: சமாதானம் *(எரே.28:1-17)*

கர்த்தர் தம் மக்களுக்கு சமாதானம் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் மக்களை ஆண்டவர் அழைக்கிறார். நாம் அவர் நுகத்தை ஏற்றுக் கொண்டு நம் சுமையை இயேசுவிடம் கொடுத்தால் நம் ஆத்துமாவுக்கு அமைதி கிடைக்கும். தீய வழியை பின்பற்றுவோருக்கு சமாதானம் கிடைக்காது.

13. செவ்வாய்: கேட்கப்படும் ஜெபம் *(எரே.29:1-16)*

கெட்ட எண்ணங்களை நீக்கி ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு ஆண்டவர் நமக்கு பதில் தருகிறார். அன்னாள் தன் மனதில் நினைத்து அமைதியாக பொருத்தனையோடு ஜெபித்த ஜெபத்திற்கும் பதில் தந்தார். நாமும் ஜெபித்து ஆசீர்வாதம் பெறுவோம்.

14. புதன்: உபவாசம் *(ஏசா.58:1-14)*

உபவாசம் ஆண்டவருக்கு நேராக நமது மனதை திருப்புவதாகும். நம்மை போன்ற மனிதனுக்கு உதவாமல் நம் ஆகாரத்தை மிச்சம் பிடிக்காமல் அதை ஏழையோருக்கு கொடுத்து நம் விண்ணபத்தை ஆண்டவரிடம் கேட்பதாகும். ஆண்டவர் நமக்கு வெளிப்படையாக பதில் செய்வார்.

15. வியாழன்: பொய் தீர்க்கதரிசி *(எரே.29:17-32)*

கடவுளின் பெயரை சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றும் தீர்க்கதரிசி கள்ளதீர்க்கதரிசியாவார். அவர்கள் ஆ ட்டுதோலை போர்த்திக் கொண்டு வரும் ஓநாய்கள் என இயேசு சொல்கிறார். அவர்களை அழித்து விடுவேன் என ஆண்டவர் சொல்கிறார். உண்மையாய் ஆண்டவர் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம், ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வோம்.

16. வெள்ளி: பயப்படாதே *(எரே.30:1-24)*

ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாத மக்கள் பாபிலோனுக்கு சிறையாக நேபுகாத்நேச்சாரால் கொண்டு போகப்பட்டார்கள். கடவுளின் கோபத்தால் அழிந்து விடுவோமோ என்று பயந்தவர்களுக்கு பயப்படாதே உன் மக்களை காப்பாற்றுவேன் என வாக்கு கொடுக்கிறார். கர்த்தர் நம்முடன் இருக்கும் போது நாம் பயப்பட தேவை இல்லை அவர் எல்லா தீங்கிற்கும் விலக்கி காப்பார்.

17. சனி: திரும்புதல் *(எரே.31:1-21)*

மக்கள் ஆண்டவருக்கு கீழ்ப்படியாததால் அந்நிய நாட்டிற்கு அடிமையாக்கப்பட்டார்கள். அவர்கள் பாவத்தையும், அக்கிரமத்தையும் மன்னித்து மீண்டும் அவர்கள் தங்கள் தாய் நாட்டிற்கு திரும்பி வந்தனர். நாமும் ஆண்டவருக்கு நேராக திரும்புவோம்.

18. ஞாயிறு: பாவமன்னிப்பு *(எரே.31:22-40)*

உங்கள் வஸ்திரங்களை அல்ல உங்கள் இருதயங்களை கிழித்து தேவனிடத்தில் திரும்புங்கள். அவர் நமக்கு இரக்கம் பாராட்டுவார். மன்னிப்பதற்கு தயை பெருத்தவர். இயேசு நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி அவருடைய இரத்தத்தால் பாவ மன்னிப்பை நமக்கு தந்து நம்மை பாவமற சுத்திகரிக்கிறார். நாம் அவருடைய இரத்தத்தால் கழுவப்பட அர்ப்பணிப்போம்.

19. திங்கள்: எல்லாம் கூடும் *(எரே.32:1-22)*

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு ஆண்டவர் தன்னை எல்லாம் வல்ல ஆண்டவராக (எல்ஷடாய்) காண்பித்தார். நமக்கு நம்பிக்கையற்ற சூழல் உருவாகும் போதும், முடியாது என நாம் உணரும் போதும் அதை ஆண்டவரிடம் சொன்னால் முடித்து தருவார். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.

20. செவ்வாய்: நன்மை *(எரே.32:23-44)*

நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் என ஆண்டவர் காயினிடம் சொல்கிறார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்வான். நாம் நன்மை செய்தால் நமக்கு நன்மை கிடைக்கும். விளையச் செய்கிறவர் தேவன்.

21. புதன்: சிறையிருப்பு *(எரே.33:1-11)*

யோசேப்பு செய்யாத குற்றத்திற்காக சிறை சென்றார். கர்த்தர் அவனோடிருந்து அவனை விடுவித்து எகிப்திற்கு அதிபதியாக்கினார். நாமும் நன்மை செய்து பாடுபட ஆண்டவர் அழைத்திருக்கிறார். அதை பொறுமையோடு சகித்தால் மேன்மையும், வாடாத கிரிடமும் ஆண்டவர் நமக்கு தருவார்.

22. வியாழன்: நீதியின் கிளை *(எரே.33:12-26)*

நீதி என்னும் மரமானது வெட்டப்பட்டாலும்,அழிக்க வேண்டும் என முயற்சி எடுக்கும் மனிதர்கள் பலராக இருந்தாலும் அதின் அடி மரத்திலிருந்து ஒரு துளிரை ஆண்டவர் தோன்ற செய்து அதை ஒரு பெரிய மரமாக்குவார். ஆண்டவர் நியாயத்திற்கு ஜெயம் கிடைக்க பண்ணும் வரைக்கும் அவர் நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற தீயை அணைக்காமலும் இருப்பார்.

23. வெள்ளி: பிழைப்பு *(எரே.34:1-22)*

நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் நாட்டை பிடிக்க வரும் போது சிதேக்கியா கலங்கினான். ஆண்டவரிடம் மன்றாடினான். எரேமியா தீர்க்கதரிசி அவனிடம், நீ பட்டயத்தால் சாவதில்லை என்று சொன்னான். துன்மார்க்கனுடைய சாவை விரும்பாத தேவன் அவன் மனந்திரும்பி பிழைப்பதையே விரும்புகிறார்.

24. சனி: ஊழியத்தில் பங்கு *(அப்.1:15-26)*

இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களில் யூதாஸ் மரித்ததற்கு பின்பு சீட்டு போட்டு மத்தியாவை தேர்வு செய்தார்கள். இவர் அந்த சீஷர்களுடன் சேர்ந்து ஊழியத்தை நிறைவேற்றி அற்புதங்களும், அடையாளங்களும் செய்தார். நாமும் தேவ ஊழியத்தை செய்வோம் அவருக்கு சாட்சியாக வாழ்வோம்.

25. ஞாயிறு: தேசம் *(எரே.35:1-19)*

நாம் வாழும் தேசம் ஆண்டவர் நமக்கு ஆசீர்வதித்து தந்தது. நாமும் கர்த்தருக்கு பயந்து நடந்தால் தேசத்தின் நன்மையை அநுபவிப்போம். பூமி தன் பலனை தரும் நாம் திருப்தியாக சாப்பிட்டு சுகமாக குடியிருக்கலாம்.

26. திங்கள்: கீழ்ப்படிதல் *(எரே.36:1-17)*

நோவா கர்த்தர் தனக்கு சொன்னப்படியெல்லாம் செய்து அவமானத்தை சகித்து ஆண்டவரை விசுவாசித்து செய்தான். அதனால் தனக்கு வந்த பேராபத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். நாமும் ஆண்டவர் சொற்படி செய்தால் ஆசீர்வாதம் பெறுவது மட்டுமல்லாமல் வரும் கோபத்திற்கு தப்பிக்கொள்ளலாம்.

27. செவ்வாய்: ஜெபம் *(எரே.36:18-32)*

தானியேல் ஜெபத்தினால் சிங்கத்தின் வாயை கட்டினார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ அக்கினியின் உக்கிரத்தை வென்றார்கள். எசேக்கியா அரசன் யுத்தத்தில் வெற்றி பெற்றான். நாமும் ஜெபித்தால் வெற்றி நிச்சயம்.

28. புதன்: மோசம் போகாதே *(எரே.37:1-21)*

நல்லவர்களை கெடுக்க வேண்டும் என தீமை செய்யும் எண்ணமுடைய மக்கள் மத்தியில் நம்மை ஆண்டவர் சாட்சியாக வைக்க விரும்புகிறார். ஆகாத உரையாடல், வீணான பேச்சு, கெட்ட வார்த்தைகள், தீய செய்கைகள் இவை அனைத்தும் நம்மை மோசம் போக்கும். நற்செயல் செய்யுங்கள் நலமுடன் வாழ்வீர்கள்.

இந்த மாதம் பிறந்தநாள் கொண்டாடுகிற பாலியர்நேசன் ஆயுட்கால அங்கத்தினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள். ஆண்டவரின் ஆசி உங்களோடிருக்கட்டும்.

HAPPY BIRTHDAY FRIENDS...

சாட்சிகள்

என்னுடைய மகன் ஜெஸ்வின் ஜெபதுரை பாலியர் நேசன் ஆயுள்கால அங்கத்தினர். அவன் B.E. படித்து முடிக்க தேவன் கிருபை செய்தார். கிட்டத்தட்ட 1 1/2 ஆண்டுகளுக்கு மேல் சரியான வேலையில்லாமல் கஷ்டப்பட்டான். நான் ஒரு நாள் பாலியர் நேசன் பத்திரிக்கையில் சாட்சி பகுதியில் ஒரு சகோதரன் தனக்கு வேலை கிடைத்ததற்காக சாட்சி எழுதியிருந்ததை படித்தேன். நானும் ஒரு பொருத்தனையோடு சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் கிருபையாக அவனுக்கு ஒரு வேலை கொடுத்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக. தமிழ்செல்வி பாலசிங், சென்னை

என் பேரன் நல்ல மார்க் வாங்க வேண்டும் எனவும், என் மகன் வீட்டை விற்க கூடாது எனவும் ஜெபித்தேன். கர்த்தர் கிருபையாக என் பேரன் நல்ல மார்க் வாங்கவும், என் மகன் வீட்டை விற்காமல் இருக்கவும் உதவினார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.
சுசீலா, பொள்ளாச்சி

எனக்கு மே மாதம் நாக்கில் ஒரு பெரிய கட்டி இருந்தது டாக்டர் ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்றார். நான் தினமும் ஜெபித்து ஆப்ரேஷன் இல்லாமல் சுகமாக வேண்டும். அப்படி நடந்தால் பாலியர் நேசனில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் எனக்குக் கட்டி இருந்த இடம் இல்லாமல் மறையச் செய்து பூரண சுகத்தைக் காண கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். டெய்சி, சென்னை

எங்கள் மகன் R.John (B.sc Hotelmanagment) படித்தான். படித்து முடித்ததும் வேலை கிடைத்தால் பாலியர் நேசனில் சாட்சி எழுதுவதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். கோவா வில் வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். ஸ்தோத்திரம். விமலா ரூபன், கரூர்

நான் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எனக்கு அருகாமையில் மாறுதல் கிடைத்தால் பாலியர் நேசனில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை பண்ணினேன். இயேசப்பா ஜெபத்தைக் கேட்டு மாறுதல் கிடைக்க கிருபை செய்தார். இயேசப்பாவுக்கு நன்றி. **பெயர் வெளியிட விரும்பவில்லை.**

என் மகன் திருச்சி Annauniversity யில் M.E Part Time படித்து கொண்டிருந்தான். கடைசி வருடம் குடும்ப பிரச்சனை, என் கணவர் சுகவீனமானதால் அவன் படிப்பை முடிக்க சிரமப்பட்டான். நான் அவன் M.E. நல்ல படியாக முடித்தவுடன் பாலியர் நேசனில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்தேன். அதன்படி M.E. 1st Class- ல் Pass செய்தான். தேவனுக்கு மகிமையுண்டாவதாக. ஜெயந்தி ஜோனத்தான், திருச்சி

விடைகளை எழுதி வீட்டிற்குள் செல்லலாம்

1. நோவா எந்த மரத்தால் பேழை செய்தார்?
2. உடன்படிக்கைப் பெட்டி எந்த மரத்தால் செய்யப்பட்டது?
3. இயேசுவைக் காண சகேயு எந்த மரத்தில் ஏறினான்?
4. தெபொராளை எந்த மரத்தின் கீழ் அடக்கம்பண்ணினார்கள்?
5. இயேசுவானவர் நாத்தான்வேலை எந்த மரத்தின் கீழ் கண்டார்?
6. நோவா அனுப்பிய புறா எந்த மரத்தின் இலையை கொண்டு வந்தது?
7. தாவீதுராஜா எந்த மரத்தால் செய்யப்பட்ட வீட்டில் வாசம் பண்ணினார்?

கர்த்தரின் கிருபை

எல்லோருக்கும்... எப்போதும்...

பாடிப் பார்

இந்த பாடலை

இந்த சூப்பரான பாடலை உன் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கையோடு சேர்ந்து பாடுவாயா?

சாலமோன் செல்வராஜ்

ஆண்டவர் தந்த ஆலயம் கிருபையே
ஆலயம் தந்த நன்மைகள் ரொம்பவே
ஆலயத்தின் நடுவில் கிருபையை சிந்திப்பேன்
ஆண்டவர் தங்கிடும் ஆலயம் நான்தானே
(2)

கர்த்தரை சிந்திப்பேன்
அவர் கிருபையை சிந்திப்பேன்
வாழ்வில் சிந்திப்பேன்
ஆலயத்தில் சிந்திப்பேன்
(2)

TDCM வழங்கும் சின்ன மனசுல

JTK TV - யில்

உலகின் எப்பக்கத்திலிருந்தும்
JTK-TV நிகழ்ச்சிகளைக் காணலாம்...

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6 முதல் 6:30 வரை
குடும்பத்துடன் பார்த்து தேவ ஆசீர்வாதம் பெற்றிடுவீர்

காலை மாலை வாசிக்கவேண்டிய வேதாகம பகுதிகள் – பிப்ரவரி

கர்த்தாவே உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும். ஆமென்.

நாள்	காலை பாகம்	மனப்பாட தங்கவசனங்கள்		ஒத்துவாக்கியம்	மாலை பாகம்
1 வியாழன்	எரே.22:1-15	...ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்;...	3	எபே.3:21	உபா.11:11-21
2 வெள்ளி	1சாமு.1:20-28	...கர்த்தர் தம்முடைய வார்த்தையை மாத்திரம் நிறைவேற்றுவாராக...	23	ஏசா.55:11	உபா.11:22-32
3 சனி	எரே.22:16-30	...சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்;...	16	நீதி.9:10	உபா.12:1-12
4 ஞாயிறு	எரே.23:1-20	...இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்;...	6	லேவி.25:18	உபா.12:13-22
5 திங்கள்	எரே.23:21-40	நான்... தூரத்திற்கும் தேவன் அல்லவோ...	23	எபி.1:2	உபா.12:22-32
6 செவ்வாய்	எரே.24:1-10	...அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன்.	5	யாத்.28:38	உபா.13:1-9
7 புதன்	எரே.25:1-20	...அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத்தக்கதாகவும் பதில் அளிப்பேன்...	14	2கொரி.5:10	உபா.13:10-18
8 வியாழன்	எரே.25:21-38	...துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார்...	31	நியா.7:20	உபா.14:1-10
9 வெள்ளி	எரே.26:1-14	...உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்தி... கர்த்தருடைய சத்தத்தைக்கேளுங்கள்.	13	1பேது.5:10	உபா.14:11-20
10 சனி	எரே.26:15-24	...தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்;...	19	யோவே.2:13	உபா.14:21-29
11 ஞாயிறு	எரே.27:1-22	...எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன்.	5	ஆதி.1:29	உபா.15:1-11
12 திங்கள்	எரே.28:1-17	சமாதானம் வரும்...	9	யோவா.14:27	உபா.15:12-23
13 செவ்வாய்	எரே.29:1-16	...நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.	12	சங்.3:4	உபா.16:1-12

14 புதன்	ஏசா.58:1-14	...எனக்கு உகந்த உபவாசம்	7	மத்.6:17	உபா.16:13-22
15 வியாழன்	எரே.29:17-32	...உங்கள் கண்களுக்கு முன்பாக கொன்று போடுவான்.	21	மத்.7:15	உபா.17:1-10
16 வெள்ளி	எரே.30:1-24	...நீ பயப்படாதே;...	10	ஏசா.41:10	உபா.17:11-20
17 சனி	எரே.31:1-21	...உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள்...	17	யோபு.22:23	உபா.18:1-11
18 ஞாயிறு	எரே.31:22-40	...அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.	34	1யோவா.1:7	உபா.18:12-22
19 திங்கள்	எரே.32:1-22	...உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.	17	லூக்.1:37	உபா.19:1-10
20 செவ்வாய்	எரே.32:23-44	...எல்லா நன்மையை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்...	42	யாக்.1:17	உபா.19:11-21
21 புதன்	எரே.33:1-11	தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன்...	11	சங்14:7	உபா.20:1-10
22 வியாழன்	எரே.33:12-26	நீதியின் கிளையை முளைக்கப் பண்ணுவேன்;...	15	ஏசா.11:1	உபா.20:11-20
23 வெள்ளி	எரே.34:1-22	...நீ பட்டயத்தாலே சாவதில்லை.	4	எபே.3:27	உபா.21:1-9
24 சனி	அப்.1:15-26	...ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்.	17	அப்.4:30	உபா.21:10-23
25 ஞாயிறு	எரே.35:1-19	...நான் கொடுத்த தேசத்திலே குடியிருப்பீர்கள்...	15	உபா.8:10	உபா.22:1-10
26 திங்கள்	எரே.36:1-17	...தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்.	8	அப்.26:19	உபா.22:11-19
27 செவ்வாய்	எரே.36:18-32	...விண்ணப்பம் பண்ணினார்கள்;...	25	பிலி.4:6	உபா.22:20-30
28 புதன்	எரே.37:1-21	...நீங்கள் மோசம்போகாதிருங்கள்,...	9	எபே.5:6	உபா.23:1-11

14. சாம்பற் புதன்   24. புனிதர் மத்தியா திருநாள்

பயணங்கள் தொடரட்டும்...

ஜெஸிக்கா டப்ராஃப், 7 வயது பெண் குழந்தை, 1996 ம் ஆண்டு அமெரிக்கா முழுவதும் கொண்டாடப்பட்ட பெண் குழந்தை. அவளுக்கு ஆறு வயதிருக்கும் போது விமானம் ஓட்ட ஆசை பிறந்தது. குழந்தைகள் ஆசைப்பட்டால் அதை நிறைவேற்றுவதுதானே பெற்றோரின் பெரும்கடமை. ஜெஸிக்கா தன் 6வது பிறந்தாள் அன்று முதலாவதாக விமானம் ஓட்டும் பயிற்சியைத் துவங்கினாள். அவருடைய தகப்பனார் அவளுக்கு பயிற்சி கொடுக்க ஒரு சிறந்த விமானி, பயிற்சி பெற ஒரு குட்டி விமானம் என்று எண்ணற்ற ஏற்பாடுகளை செய்ததோடு அவள் பயிற்சியெடுக்கும்போது துணையாயுமிருந்தார்.

6 வயது பெண் குழந்தை விமானம் ஓட்ட தயாராவதைப் பற்றி முழு அமெரிக்காவே வியந்தது. அப்போது குழந்தைகள் விமானம் ஓட்டுவதைப் பற்றி முன்னனுபவம் மற்றும் தெளிவான கொள்கை இல்லாததால் அரசாங்கம் அமைதிகாத்தது. ஆனால் அமெரிக்க மீடியா ஜெஸிக்காவை கொண்டாடியது. தினமும் செய்தித்தாள்கள், டி.வி என்று ஜெஸிக்காவின் சாதனை முயற்சி பறைசாற்றப்பட்டது. அக்குழந்தைக்கும், அவள் பெற்றோருக்கும் இது எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்?

ஏப்ரல் 11, 1996 காலை 8.24 மணிக்கு ஜெஸிக்காவின் விமானம் ஓடுதளத்திலிருந்து மேலெழும்பியது. எப்போதும் போல ஜெஸிக்காவின் விமானம் தரையிறங்குமிடத்தில் மக்கள், மீடியாவெல்லாம் அமர்க்களமாய் காத்திருந்தனர். ஜெஸிக்கா, அவள் தகப்பனார், அவள் பயிற்சியாளர் மூவரும் மகிழ்ச்சியோடு விமானத்தில் பயணித்து கொண்டிருந்தனர். அன்று நல்ல காற்றும், மழை பெய்வதற்கான வாய்ப்புமிருந்தது. விமானம் கிளம்புவதற்கு முன் ஜெஸிக்காவின் தகப்பனார் “இன்று காற்று மழையை தோற்கடித்து பறக்கப்போகிறோம்” என்று சொன்னார். சிறுவயதிலேயே அமெரிக்கா முழுக்க விமானம் ஓட்டிய குழந்தை என்ற பெயரைப் பெற வேண்டுமென்று முயற்சித்த ஜெஸிக்காவின் விமானம் அன்று தன் பயணத்தை துவக்கிய சில நிமிடத்திலே தரையில் வீழ்ந்து நொறுங்கிப் போனது. அதில் பயணம் செய்த மூவரும் இறந்து போனார்கள்.

விபத்திற்கு பின் நடத்தப்பட்ட ஆய்வில் அக்குழந்தை ஒருமுறை விமானம் ஓட்டிக்கொண்டிருக்கும் போது தூங்கியது தெரியவந்தது. ஆனாலும் விடாமல் துரத்தி அவளை சாதனையாளராய் மாற்ற வேண்டுமென்று அவள் தகப்பனின் வெறி அக்குழந்தையின் வாழ்வு 7 வயதில் முற்றுபெற காரணமாயிற்று. 7 வயதிலேயே விமானம் ஓட்டியாக வேண்டுமா என்ன? குழந்தைகளின் திறனுக்கு மீறிய அநேக சாதனைகளைப் படைக்கும்படி நாமும் அவர்களை அனுதினமும் துன்புறுத்தி கொண்டுதான் இருக்கிறோம். என்றும் மாறும் இந்த சாதனை மோகம்?

- APJ

எமது புதிய ஆயுட்கால அங்கத்தினர்கள்

A9506 M.Pershia Navaroj, D/o.Mr.N.Manohar Jeyaraj, Sivakasi.

A9507 J.Jeba Sofia, D/o.Mr.T.Jesu ManikaRaja, KeelaSurandai.

A9508 M.Grayna,.D/o.Mr.T.Maignanamuthu, keelaSurandai.

A9509 P.Thanga Thanisha,D/o.Mr.S.T.J.Pandiyan, Pavoorchatram.

A9510 P.Selva Ponisha,.D/o.Mr.S.T.J.Pandiyan, Pavoorchatram.

A9511 P.Jenison Samuel,.S/o.Mr.S.T.J.Pandiyan, Pavoorchatram.

A9512 J.Christine Annie,.D/o.Rt.Rev.J.J.Christdoss, Palayamkottai.

A9513 M.Ielin,.S/o.Mr.Muthupandi Thangadurai, Palayamkottai.

A9514 A.Aaron,.S/o.Mr.Anbu Sathiyaraj, Kattarankulam.

கண்டு பிடி

வேதாகமப் பகுதி: யோவான்

1. யூதருக்குள்ளே அதிகாரியானவன் யார்?
2. எது உங்களை விடுதலையாக்கும்?
3. பிலிப்பு எந்த ஊரைச் சேர்ந்தவன்?
4. இயேசுவுக்கு அந்தரங்க சீஷனாய் இருந்தவன் யார்?
5. இயேசு எந்த மண்டபத்தில் உலாவிக் கொண்டிருந்தார்?
6. நானே நல்ல மேய்ப்பன் இருப்பிடம் கூறுக
7. யார் ஒளியைப் பகைக்கிறான்?
8. இயேசுவை வாரினால் அடிப்பித்தவன் யார்?
9. எந்த இடத்தில் தண்ணீர் மிகுதியாயிருந்தது?
10. மேசியா அர்த்தம் கூறுக.

விடைகளை யோவான் நற்செய்தி நூலிருந்து தேடி கண்டுபிடித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2018 மார்ச் முதல் தேதிக்குள் அனுப்புங்கள்:
TDCM,16-B, North Highground Road, CSI Bishopstowe Campus, Palayamkottai - 627 002.

காணிக்கை

1840-ஆம் ஆண்டு ஜனவரி 3ம் நாள் ஜோயன்னஸ் மற்றும் அனி கேத்ரின் தம்பதியருக்கு 7வது மகனாய் பிறந்தார் டேமியன். பெல்ஜியம் நாட்டிலுள்ள திரெமலோ என்னும் ஊரில் பிறந்து, வாழ்ந்து வந்தார். இவரது இயற்பெயர் ஜோசப் தெஃபாய்ஸ்ட்ர். இவரது தந்தை கோதுமை வியாபாரியாக இருந்தார்.

டேமியனின் மூத்த சகோதரிகள் 2 பேர் அருட் சகோதரிகளாக ஆண்டவருக்கு பணியாற்றினர். அவரது மூத்த சகோதரர் ஒருவரும் ஆண்டவருக்கு பணியாற்றினார். ஆகவே, தானும் ஆண்டவருக்காக பணிசெய்ய வேண்டுமென்று தன்னை அர்ப்பணித்தார். 1860-ஆம் ஆண்டு அக்டோபர் 7 ம் நாள் தன் ஊழிய வாழ்வை தொடங்கினார். அவருக்கு குருத்துவராக பணியாற்ற ஆசை இருந்தது. ஆனால், அவருடைய மேலதிகாரிகள் அவருக்குப் போதிய கல்வியறிவு இல்லையென்று சொல்லி, குருவாக தகுதியநற்றவர் என்றார்கள்.

கர்த்தரோ, டேமியனுக்கு நல்ல ஞானத்தை கட்டளையிட்டிருந்தார். ஆகவே, அவர் லத்தீன் மொழியை சிறப்பாக பயின்றார். மேலதிகாரிகளின் கண்களில் தயவு கிடைத்தது. குருத்துவ படிப்புக்கு அனுமதித்தார்கள். குருத்துவ படிப்பின்போது ஒவ்வொரு நாளும் நாடு கடந்து சென்று கிறிஸ்துவுக்காக பணிசெய்ய வேண்டுமென்று ஜெபம் பண்ணினார். மூன்று ஆண்டுகளுக்கு பிறகு அவருடைய ஜெபம் கேட்கப்படட்து.

டேமியனின் சகோதரர் நோய்வாய்ப்பட்டபடியால் ஹவாய்-க்கு சென்று பணிசெய்ய முடியவில்லை. அவருக்கு பதிலாக அவருடைய தம்பி டேமியனுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது.

1864-ஆம் ஆண்டு மார்ச் 19ம் நாள் ஹவாய் நாட்டில் பணிகளைத் தொடங்கினார் டேமியன். அதே வருடம் மே 21-அன்று குருவாக அபிஷேகிக்கப்பட்டார். இந்த ஹவாயில் ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வந்தனர். அங்கு வெளிநாடுகளிலிருந்து வணிகர்கள், கடல் பயணிகள், சுமந்து வந்த நோய்கள் அம்மக்களுக்கு பரவியது. ஆனால், அங்கு மருத்துவ சேவை

கிடையாது. அங்குள்ள அநேக மக்களுக்கு தொழுநோய் பரவி வந்தது. ஆகவே, அந்த நாட்டில் அரசர் சட்டம் இயற்றி, தொழுநோயாளிகளை தனி குடியிருப்பில் ஒதுக்கி வைத்தனர். கைவிடப்பட்ட நிலையில் இருந்த அம்மக்களுக்கு பணிசெய்ய குருக்கள் ஒருவரும் முன்வரவில்லை. ஆழ்ந்து, ஜெபம் செய்த பிறகு 4 குருக்கள் முன்வந்தனர். அவர்களுள் முதன்முதலாக, "தொழுநோயாளிகளுக்கு நான் ஊழியம் செய்ய வருகிறேன்" என்று டேமியன் முன்வந்தார்.

அதன்படி மே-10, 1873ம் ஆண்டு கலாவுபப்பா என்னும் தொழுநோயாளிகளின் குடியிருப்புக்கு வந்து சேர்ந்தார். முதல் வேளையாக அங்கு ஒரு ஆலயத்தை நிறுவினார். தொழுநோயாளிகளின் புண்களை கட்டுவது, அவர்களுக்கு வீடுகளை கட்டி கொடுப்பது, இறந்தவர்களுக்காக அடக்கப் பெட்டி செய்து கொடுப்பது, கல்லறைக்கு குழி வெட்டுவது போன்ற சேவைகளை தாம் ஒருவராக செய்து சாதித்தார்.

1884 டிசம்பர் மாதம் குளிப்பதற்காக வெந்நீரை தயார் செய்யும் போது தெரியாமல் காலை கொதிக்கும் நீரில் விட்டுவிட்டார். அதனால் அவருடைய தோலில் கொப்புளம் ஏற்பட்டது. ஆனால், அவருக்கோ வேதனை இல்லை. எந்த உணர்வும் இல்லை. அப்பொழுது தான் அவருக்கும் தொழுநோய் வந்து விட்டதை கண்டறிந்தனர். அதன்பிறகு, அவர் சில மருந்துகளை எடுத்து கொண்டார். அது ஓராண்டு நல்ல பலனை கொடுத்தது.

அவருடைய வாழ்வின் கடைசி ஆண்டுகளில் தொழுநோயாளிகளுக்கு பணி செய்ததோடு, அனாதை இல்லங்களையும் விரிவுபடுத்தி, முனைந்து செயல்பட்டார்.

1889 ஆம் ஆண்டு மார்ச் 23ந் தேதி நோயின் கொடுமையின் காரரணமாக படுத்தப் படுக்கையானார். ஏப்ரல் 15ந் தேதி தந்தை டேமியன் தொழுநோயால் இறந்தார். அவருக்கு வயது 49. அவர் வாழ்ந்த இடத்திற்கு மக்கள் இன்று செல்லவேண்டுமென்றால் கூட கோவேறு கழுதையில் தான் செல்வார்கள். ஏனென்றால், அப்படி தொழுநோயாளிகளுக்கான ஒதுக்கப்பட்ட பகுதியில் தான் வாழ்ந்தார், சேவைப்புரிந்தார், மரித்தார். அவர் எழுதிய கடிதத்தில்,

"இயேசுவுக்கு அனைத்தையும் காணிக்கையாக்கும் வண்ணம் நான் இங்குள்ள தொழுநோயாளரோடே என்னையும் ஒரு தொழுநோயாளியாக ஆக்கி கொண்டேன்".

Mrs.Hannah Packiaraj

திருவசன ஊழியம்

04.02.2018 • விடுதலை பணியில் பெண்கள் • நியா 5:24

ஸ்திரிகளுக்குள்ளே கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள். கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரிகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்.

11.02.2018 • ஒப்புரவாகுதல் • எபே 2:16

பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

18.02.2018 • சபையில் சமத்துவம் • மத் 8:3

இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குத் சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.

25.02.2018 • வாழ்வு தரும் விசுவாசம் • லூக் 5:20

அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி மனுஷனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

04.02.2018 • Women partners in God's Liberative Act • Judges 5:24

Most blessed of women be Jael, the wife of Heber the Kenite, of tent dwelling women most blessed.

11.02.2018 • Reconciliation • Ephesians 2:16

Might reconcile both groups to God in one body through the cross, thus putting to death that hostility through it.

18.02.2018 • Egalitarian Church • Matthew 8:3

He stretched out his hand and touched him, saying, I do choose. Be made clean immediately his leprosy was cleansed.

25.02.2018 • Life Saving Faith • Luke 5:20

When he saw their faith, he said, Friend, your sins are forgiven you.

ஒற்றுமையை கண்டுபிடி

இவற்றில் எவை இரண்டும் ஒன்றுபோல் இருக்கிறது என்று கண்டுபிடி.



நன்மை தீமை இரண்டையும் ஏற்றுக்கொள்

ஒரு வயதான விவசாயி தன் வயலில் பாடுபட்டு உழைத்து அதில் வரும் சொற்பமான வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் வளர்த்து வந்த குதிரை காணாமல் போய்விட்டது. தகவலைக் கேள்விப்பட்ட அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் "என்ன ஒரு துரதிஷ்ட நிலை"? என்று பரிதாபமாக விசாரித்தனர்.

"இருக்கலாம்" என்று ஒரே வார்த்தையில் அவர்களின் ஆறுதலுக்கு விவசாயி பதிலளித்தார்.

அடுத்த நாள் தொலைந்து போன குதிரை தன்னுடன் மூன்று குதிரைகளை உடன் அழைத்து வந்தது. இதை ஆச்சர்யமாக பார்த்த அக்கம்பக்கத்தினர், "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி, இப்போ நாலு குதிரை கிடைச்சிடுச்சு" என்றனர்.

தனக்கு கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் மறுபடியும் "இருக்கலாம்" என்று கூறி முடித்தார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, விவசாயியின் மகன் குதிரையை வேகமாக ஓட்டிச் சென்று தவறுதலாக கீழே விழுந்து காலை உடைத்துக்கொண்டான். " என்னப்பா, உனக்கு ஒரு நல்லது நடந்தா அடுத்து ஒரு கெட்டது நடக்குதே. உன் பையன் எழுந்து நடக்க ஆறு மாசத்துக்கும் மேல் ஆகும் போல, ரொம்பக் கஷ்டமான நிலைமை" என்று கூறி ஆதங்கப்பட்டனர்.

விவசாயி பெரிதாக வருந்தாமல் "இருக்கலாம்" என்று கூறினார்.

ஒரே வாரத்தில் நாட்டில் போர் வந்து விட்டது. வீட்டில் இருக்கும் எல்லா இளைஞர்களும் கட்டாயம் போரில் கலந்துகொள்ள வேண்டும்

என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வீடு வீடாக ராணுவத்தினர் புகுந்து இளைஞர்களை அழைத்துச் சென்றனர். ஆனால் அந்த ஏழை விவசாயியின் மகனுக்குக் கால் உடைந்து இருந்ததால் அவனை மட்டும் அழைத்துச் செல்லவில்லை.

இதை கண்டு ஊர்மக்கள் அந்த விவசாயியின் அதிர்ஷ்டத்தைக் கண்டு புகழ்ந்தனர்.

இப்போதும் அந்த விவசாயி "இருக்கலாம்" என்று கூறினார்.

அவர் ஏன் எல்லாச் சூழ்நிலையிலும் ஒரே மாதிரியான சமமான மனநிலையில் இருந்தார்? காரணம் உண்டு.

அந்த விவசாயி வாழ்வின் இயல்புகளைப் புரிந்துகொண்டவர். நாள்களில் நல்ல நாள் கெட்ட நாள் என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு நாளும் நமக்கு மறைமுகமாகப் பல பாடங்களை உணர்த்திக்கொண்டிருக்கின்றது. நல்லது கெட்டது இரண்டு நாணயத்தின் இருபக்கங்கள். கஷ்டமான சூழ்நிலைகளில், இது நிரந்தரம் அல்ல நாளை என்று ஒன்று இருப்பதை மறக்க வேண்டும்.

சந்தோஷமான சூழ்நிலையில் தலை கால் புரியாமல் ஆடக்கூடாது. யாருக்கு என்ன வேண்டுமானலும் நடக்கலாம். எதையும் தலைக்கு எடுத்துச் செல்லாமல், எதைப்பற்றியும் விமர்சிக்காமல் இருப்பது நல்லது.

சுகம்-துக்கம் இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை என்பதே உணர்ந்தாலே போதுமானது.

என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.

தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். - பிலிப்பியர் 4:11,12

2

யோசுவா பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான்



எரிகோவில் பலமான பருமனான கோட்டை இருந்தது. யோசுவா யுத்தத்திற்காக ஆயத்தம் பண்ணும் போது, தேவன் அவருடைய சேனையின் தலைவனை பரலோகத்திலிருந்து அனுப்பி இஸ்ரவேலின் புதிய தலைவனிடம் அவர் உங்களுக்காக யுத்தத்தில் ஜெயத்தை கொடுப்பார் என்று ஞாபகப்படுத்தினார்.

தேவன் யோசுவாவையும் எரிகோ பட்டணத்தை எப்படி தாக்க வேண்டும் என்று சொன்னார். அது ஒரு புதிரான திட்டமாயிருந்தது. தேவனுடைய மக்கள் ஆறு நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையும், ஏழாம் நாளில் ஏழு முறையும் சுற்றி வர வேண்டும். பின்பு அவர்கள் எக்காளத்தை ஊதி சத்தமிட மதிற்சுவரானது இடிந்து விழுந்து தடைமட்டமாகும்.





தேவன் சொன்னவிதமாக யோசுவாவும், அவனுடைய படையும் செய்தார்கள். ஒரு வேளை எரிகோவின் ஜனங்கள் அவர்களைப் பார்த்து சிரித்திருக்கலாம். ஆனால், ஏழாம் நாள் ஏழுமுறை சுற்றி வந்தபின் ஆசாரியர்கள் எக்காளத்தை ஊதினார்கள். அப்போது தேவன் வாக்களித்த விதமாக... எரிகோவின் பெரிய மதில் தரைமட்டமானது.

மதிலிலே ராகாப்
வீடுமாத்திரம்
பாதுகாப்பிலிருந்தது.
அவள் கயிற்றை கட்டி
ஜன்னலிலிருந்து தொங்க
விட்டிருந்தாள்.

துரிதமாக, யோசுவாவின் மனிதர்கள் ராகாபையும் அவளுடைய குடும்பத்தையும் காப்பாற்றினார்கள். பின்பு தேவன் கட்டளையிட்ட பிரகாரம், எரிகோ அழிக்கப்பட்டது.



எரிகோவின் தங்கம், வெள்ளி மற்றும் பொக்கிஷங்களை யோசுவா பரிசுத்தத்துடன் தேவனுடைய வேலைக்காக அர்ப்பணித்தான். பின்பு எரிகோ பட்டணத்தை திரும்ப கட்டுபவர்கள் மேல் சாபத்தை வைத்தான்.

கானானிலே உள்ளவர்கள் யோசுவா எப்படி எரிகோவை தோல்வியடையச்செய்தான் என்று விரைவிலே கேள்விப்பட்டார்கள். தேவன் தன்னுடைய ஜனங்களுடன் இருக்கிறார் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

யோசுவா பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை
காணப்படுமிடம் யோசுவா 1 – 6

“தேவனுடைய வார்த்தையை
உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம்
கொடுக்கிறது.” சங்கீதம்.119:130

முற்றும்.

நான்காவது முறையாக உலகக் கோப்பையை வெல்ல இந்திய அணி தயார்!

குயின்ஸ்லாந்து: 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நான்காவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைக்க இந்திய அணி தயாராக உள்ளது.

நியூசிலாந்தில், 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடந்து வருகிறது. பி பிரிவில் இடம்பெற்ற இந்தியா தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணியை 100 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. இரண்டாவது ஆட்டத்தில் பப்புவா நியூ குய்னா அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

நீதிபதி லோயா மர்ம மரண வழக்குகள் அனைத்தும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றம்!

டெல்லி: பாஜக தேசியத் தலைவர் அமித்ஷா தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி லோயா மர்ம மரணம் தொடர்பான அனைத்து மனுக்கள் மீதும் உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும் என தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான பெஞ்ச் உத்தரவிட்டுள்ளது. மும்பை, நாக்பூர் நீதிமன்றங்களில் இருந்து நீதிபதி லோயா மர்ம மரணம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

பஸ் கட்டணத்தை வாபஸ் பெறு... சென்னையில் மாணவர்கள் மனிதச்சங்கிலி பேரணி

சென்னை: பேருந்து கட்டண உயர்வை திரும்ப பெறக்கோரி சென்னையில் கவின்கலைக்கல்லூரி மாணவர்கள் மனிதச் சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு பேருந்து கட்டணத்தை தமிழக அரசு உயர்த்தியது. இந்த கட்டண உயர்வுக்கு ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னை எழும்பூரில் கவின்கலைக்கல்லூரி மாணவர்கள் இன்று பதாகைகளுடன் மனிதசங்கிலி பேரணியில் ஈடுபட்டனர். பேருந்து கட்டணத்தை திரும்ப பெற வேண்டும் என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

நம்மை மீட்க வந்த
இரட்சகர் இயேசுவை
அவர் வாழ்க்கையை,
அவர் போதனையை
அவர் பாடுகளை,
சிந்தித்து, ஜெபித்து,
வாழ்ந்து லெந்து
நாட்களை
அனுசரிப்போம்

காணிக்கை அனுப்ப

CHEQUE / DD: CSI Tirunelveli Diocese

For Online Transfer:

Bank: Bank of India SB A/c No: 827020110000283
IFSCode: BKID0008270

குறிப்பு: Online மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் உங்கள் மொபைல் எண் அல்லது இ-மெயில் தெரிவித்தால் ரசீது அனுப்ப உதவியாயிருக்கும்.

உள்நாடு	: ஆண்டு சந்தா : ரூ.100/-	ஆயுள் சந்தா : ரூ.1500/-
வெளிநாடு	: ஆண்டு சந்தா : $50	ஆயுள் சந்தா : $500

Tirunelveli Diocesan Children's Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Email: baliarnesan@gmail.com
TDCM Helpline: 8489857572
www.baliarnesan.com

ஆசிரியர்: அருட்திரு. A.பாக்யராஜ்
இணை ஆசிரியர் : திருமதி. ஜூனிதா டேவிட்சன்
இதழ் வடிவமைப்பு : sunshine

R.N.I. No.: 1278/1957 Regn. No.: TVL/030/2015-2017. Date of Publication: 20.01.2018
Posted at: Head Post Office, Palayamkottai on the 22nd of every month.

CHILD LINE 1098 NIGHT & DAY

OUR NEW LIFE MEMBERS

A9135 A.Immanuel Chiston

A9229 A.Achsah Blessy

A9230 A.Abisah Ponsy

A9231 Farah Emerald

A9237 B.Auster Isaac

A9239 P.Mahiban Kingsly

A9243 S.D.Darius Rajkumar

A9252 Jenison Dass

A9257 A.Joannasteffi

A9265 M.Viswa

E2591 R.Prithi Viakash

E2592 S.Annish Johnlet

Published by: Rev. A. Packiaraj, Tirunelveli Diocesan Children's Mission.
Printed at: Tirunelveli Diocesan Offset Press, Palayamkottai.